**இளையர் நீதிமன்றத்தின் கீழ் வரும்**

# பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு உத்தரவு (CPO)

முக்கியத் தகவல்கள்



# பொருளடக்கம்


**01** முன்னுரை

**02** CPO (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு உத்தரவு) என்றால் என்ன?

**04** ஒரு பிள்ளைக்கு அல்லது இளம் வயதினருக்கு எப்போது பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும்?

**06** CPO விண்ணப்ப செயல்முறை

**07** இளையர் நீதிமன்றம் என்ன உத்தரவுகளை வழங்க முடியும்?

**08** மேம்பட்ட பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு உத்தரவுகள்

**09** பெற்றோர்/பாதுகாவலர்கள் CPO விண்ணப்பத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்க விரும்பினால் என்ன செய்வது?

**10** பயனுள்ள தகவல்

**11** குறிச்சொற்களுக்கான விளக்கங்கள்



**பொறுப்புத் துறப்பு**

- இந்த வெளியீடு, பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு உத்தரவுகள் பற்றிய பொதுத் தகவல்களை மட்டுமே உள்ளடக்குகிறது. இது பொதுத் தகவல் அளிப்பதற்கு மட்டுமே. சட்ட ஆலோசனைக்குப் பதிலாக இதைக் கருதக்கூடாது.
- உங்களுக்கு ஏதேனும் சட்ட ஆலோசனை தேவைப்பட்டால், தயவுசெய்து ஒரு வழக்கறிஞரை அணுகவும்.
- இந்த வெளியீட்டின் பொருள் அடக்கங்களின் தொடர்பில் எழும் அனைத்து பொறுப்புகளையும் வெளியீட்டாளர்கள் நிராகரிக்கின்றனர்.

- www.judiciary.gov.sg/family/care-protection-children-young-persons வலைத்தளம் அல்லது விரைவு குறியீட்டுப் பயன்பாட்டு (QR code) வழி மேலும் தகவல் பெறலாம்.



# முன்னுரை

**18** வயதிற்குட்பட்ட ஒரு பிள்ளைக்கு அல்லது இளம் வயதினருக்கு பராமரிப்பு அல்லது பாதுகாப்பு தேவைப்பட்டால், சமூக நல தலைமை இயக்குநர் (தலைமை இயக்குநர்) அல்லது சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சின் **(MSF)** சிறுவர் பாதுகாப்பு அதிகாரி (பாதுகாவலர்) ஒரு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு உத்தரவுக்கு **(CPO)** விண்ணப்பிக்கலாம்.

**CPO-** க்கான விண்ணப்பம் எவ்வாறு செய்யப்படுகிறது என்பது குறித்த தகவல்களை இந்த கையேடு உங்களுக்கு வழங்கும்.

# CPO (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு உத்தரவு) என்றால் என்ன?

பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு உத்தரவு என்பது பிள்ளைகளை மற்றும் இளைஞர்களை (18 வயதிற்குட்பட்டவர்கள்) பராமரிப்பு அல்லது பாதுகாப்பு தேவைப்படும் நிலையில் பாதுகாப்பாக வைத்திருக்க உதவும் ஒரு நீதிமன்ற உத்தரவாகும்.

சிறுவர் மற்றும் இளம் வயதினர் சட்டத்தின் (CYPA) கீழ்வரும் வழக்குகளைக் கையாளும் இளையர் நீதிமன்றத்தில், ஒரு CPO விண்ணப்பம் விசாரிக்கப்படும்.



**ஒரு CPO விண்ணப்பிப்பதற்கு முன், சமூக நல தலைமை இயக்குநர் (தலைமை இயக்குநர்) அல்லது சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சின் (MSF) சிறுவர் பாதுகாப்பு அதிகாரி (பாதுகாவலர்):**

அ
சிறுவர் அல்லது இளம் வயதினரை தங்கள் வீட்டிலிருந்து தற்காலிக பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு இடத்திற்கு அகற்றலாம்; அல்லது.

ஆ
பதிவு செய்யப்பட்ட மருத்துவ அதிகாரி அல்லது அங்கீகரிக்கப்பட்ட சமூக நல அலுவலர் முன் சிறுவர் அல்லது இளம் வயதினரின் ஆரோக்கியத்தை மற்றும் தேவையான சிகிச்சையை மதிப்பீடு செய்யலாம்.



# ஒரு சிறுவர் அல்லது இளம் வயதினருக்கு எப்போது பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவை ஏற்படும்?

ஒரு சிறுவர்/ இளம் வயதினருக்கு பராமரிப்பு அல்லது பாதுகாப்பு தேவைப்படும் நிலை கீழ்கண்டவை நிகழும்போது ஏற்படும் :



பெற்றோர் அல்லது பாதுகாவலர் இல்லை.

பெற்றோர்/பாதுகாவலரால் கைவிடப்பட்டார்கள், மேலும் பொருத்தமான வேறு எந்த நபரும் அவர்களை பராமரிக்க தயாராக இல்லை.






பெற்றோரில் ஒருவர்/ பாதுகாவலர் இருந்தும்

- அவருக்கு போதுமான உணவு, உடை, மருத்துவ உதவி, வீட்டுவசதி, பராமரிப்பு அல்லது மற்ற வாழ்க்கைத் தேவைகளை வழங்குவதில் இயலாமையில் உள்ளார் அல்லது புறக்கணித்துள்ளார்.
- பிள்ளையை முறையாக மேற்பார்வையிடுவதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அவர் தகுதியற்றவர் அல்லது அவரால் இயலவில்லை, அல்லது புறக்கணித்துவிட்டார். இதனால் பிள்ளை மோசமான நண்பர்களுடன் பழகி ஆபத்துக்கு ஆளாக நேரிடுகிறது.



கீழ்கண்டவர்களால் மோசமாக நடத்தப்படும் ஆபத்தில் உள்ளார்

- அவர்களுடைய பெற்றோர்/ பாதுகாவலரால்.
- வேறு எந்த நபரிடமிருந்து, பெற்றோர் அல்லது பாதுகாவலர் பிள்ளையை பாதுகாக்கவில்லை.



உடல்நலம் மற்றும் நல்வாழ்வைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காக பரிசோதிக்கப்பட, விசாரிக்கப்பட அல்லது சிகிச்சையளிக்கப்பட வேண்டும்.




பெற்றோர்/ பாதுகாவலரால் உணர்ச்சிபூர்வமான அல்லது உளவியல் ரீதியான துன்புறுத்தல் காரணமாக பாதிப்புக்கு ஆளாக நேரிடும் அல்லது பாதிக்கப்படுகிறார்.



அவருக்கு எதிராக தொடர்புடைய குற்றம் புரியப்பட்டுள்ளது அல்லது புரியப்பட்டதாக நம்பப்படுகிறது.

பெற்றோர்/பாதுகாவலர் அல்லது மற்றொரு குடும்ப உறுப்பினரால் அவருக்கு எதிராக தொடர்புடைய குற்றம் புரியப்படும் அபாயம் உள்ளது.



தனக்கு அல்லது வேறொருவருக்கு தீங்கு விளைவிக்கும் விதத்தில் நடந்துகொள்கிறார்

- அவரது பெற்றோரால் / பாதுகாவலரால் நிலைமையை சரிசெய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்க இயலவில்லை அல்லது விரும்பவில்லை.
- அல்லது பெற்றோரால்/ பாதுகாவலரால் எடுக்கப்பட்ட தீர்வு நடவடிக்கைகள் தோல்வியடைகின்றன.






பின் வரும் சூழ்நிலையில் உள்ளார் என்று கண்டறியப்பட்டுள்ளது

- வீடற்ற நிலைமை மற்றும் தன்னைத் தானே ஆதரிக்க முடியவில்லை.
- பணம் அல்லது / மற்றும் உணவுக்காக பிச்சை எடுப்பது.
- சட்டவிரோத லாட்டரிகள், சட்டவிரோத உணவு விற்பனை, சூதாட்டம் அல்லது மற்ற விரும்பத்தகாத செயல்களைச் செய்தல்.
- எந்தவொரு போதையூட்டும் பொருளைப் பயன்படுத்துதல் அல்லது சுவாசித்தல் (போதையூட்டும் பொருள்கள் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி).


# CPO விண்ணப்ப செயல்முறை

**படி 1**
தலைமை இயக்குநர் அல்லது பாதுகாவலர் சிறுவர் அல்லது இளம் வயதினரின் சார்பாக இளையர் நீதிமன்றத்தில் புகார் செய்வார்.



**படி 2**
புகாரை விசாரிக்க போதுமான காரணங்கள் உள்ளதா என்பதை இளையர் நீதிமன்ற நீதிபதி தீர்மானிப்பார். அப்படியானால், இளையர் நீதிமன்ற நீதிபதி சிறுவர் அல்லது இளம் வயதினரைக் குறித்த சமூக அறிக்கையைக் கோரலாம்.

சமூக அறிக்கைத் தயாரிக்கப்படும் போது, சிறுவர் அல்லது இளம் வயதினரை ஒரு தகுதிப்பெற்ற நபரின் பராமரிப்பில் அல்லது பாதுகாப்பான இடத்தில் தங்குமாறு இளையர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிடலாம்.






**படி 3**
சமூக அறிக்கை இளையர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும் முன், ஒரு சிறுவர் பாதுகாப்பு அதிகாரி சிறுவர் அல்லது இளம் வயதினர் மற்றும் பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் மற்றும்/அல்லது உறவில் உள்ளவர்களை நேர்காணல் செய்வார்.

# இளையர் நீதிமன்றம் எவ்வகையான உத்தரவுகளை வழங்க முடியும்?

இளையர் நீதிமன்ற நீதிபதி சமூக அறிக்கையின் உள்ளடக்கங்களை ஆராய்ந்து மற்ற இரு குழு ஆலோசகர்களுடனும் வழக்கு பற்றி விவாதிப்பார். (குழு ஆலோசகர்கள் சிறுவர்கள் மற்றும் இளம் வயதினர்களுடன் பரந்த வேலை அனுபவம் கொண்ட சமூகத்தைச் சேர்ந்தத் தனிநபர்களாவார். இவர்கள் சிங்கப்பூர் அதிபரால் நியமிக்கப்பட்டவர்கள்).

சிறுவர் அல்லது இளம் வயதினருக்கு பராமரிப்பு அல்லது பாதுகாப்பு தேவை என்று இளையர் நீதிமன்ற நீதிபதி திருப்தியடைந்தால், இளையர் நீதிமன்ற நீதிபதி:



சிறுவர் அல்லது இளம் வயதினரை முறையாக பேணவும் பாதுகாப்பளிக்கவும் சிறுவர் அல்லது இளம் வயதினரின் பெற்றோர்/ பாதுகாவலர் ஒரு பிணை பத்திரத்தில் கையெழுத்திட உத்தரவிடலாம்.



நீதிமன்றம் குறிப்பிட்ட காலத்திற்கு சிறுவர் அல்லது இளம் வயதினரை ஒரு தகுதிப்பெற்ற நபரின் பராமரிப்பில் அமர்த்தப்படுமாறு உத்தரவிடலாம்.



நீதிமன்றம் குறிப்பிட்ட காலத்திற்கு சிறுவர் அல்லது இளம் வயதினரை ஒரு பாதுகாப்பான இடத்தில் அல்லது தற்காலிக பராமரிப்பு மற்றும் பாதுகாப்பான இடத்தில் அமர்த்தப்படுமாறு உத்தரவிடலாம்.



நீதிமன்றம் குறிப்பிட்ட காலத்திற்கு சிறுவர் அல்லது இளம் வயதினரை தலைமை இயக்குநர், ஒரு காப்பாளர், அங்கீகரிக்கப்பட்ட சமூக நல அலுவலர் அல்லது நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்ட வேறு எந்த நபரின் மேற்பார்வையில் அமர்த்தலாம்.

# மேம்பட்ட பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு உத்தரவுகள்

சிறுவர்கள் மற்றும் இளம் வயதினர்களுக்கு நிலைத்தன்மையும் நீண்டகால பராமரிப்பும் உறுதிப்படுத்த CYPA-இன் அண்மைய திருத்தங்களின் கீழ் மேம்பட்ட பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு உத்தரவுகள் (ECPO) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

சிறுவர் மற்றும் இளம் வயதினர் 21 வயதாகும் வரை அல்லது நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்ட குறுகிய காலத்திற்கு, ஒரு தகுதிப்பெற்ற நபரின் பராமரிப்பில் அமர்த்தப்பட இளையர் நீதிமன்ற நீதிபதி பின்வரும் வேளைகளில் ECPO-ஐ உத்தரவிடலாம்:




சிறுவர் மற்றும் இளம் வயதினர் நடைமுறையில் உள்ள CPO-இல் இருந்தால் அல்லது பெற்றோர்/பாதுகாவலர் தவிர மற்ற பராமரிப்பவரின் தன்னிச்சையான பராமரிப்பில் கீழ், ஒரு குறிப்பிட்ட காலம் அல்லது அதற்கு கூடுதலான காலத்திற்கு உடன்பாட்டில் இருந்தால்.



சிறுவர் மற்றும் இளம் வயதினரைப் பராமரிக்க பெற்றோர்கள் / பாதுகாவலர்கள் தகுதி அற்றவர்கள்.



சிறுவர் / இளம் வயதினரை தனது பெற்றோர்களின் / பாதுகாவலர்களின் பராமரிப்புக்கு திருப்பி அனுப்புவது பொருத்தமானதல்ல.

தலைமை இயக்குநர் அல்லது காப்பாளர் அல்லது சிறுவர் அல்லது இளம் வயதினரை பராமரிப்பவர், சிறுவர் அல்லது இளம் வயதினரைப் பாதிக்கும் முடிவுகளை எடுக்க அனுமதிக்கும் வகையில் இளையர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிடலாம்.

# பெற்றோர்/பாதுகாவலர்கள் CPO விண்ணப்பத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்க விரும்பினால் என்ன செய்வது?

உங்கள் பிள்ளைக்கு CPO அல்லது ECPO விண்ணப்பத்திற்கு நீங்கள் எதிர்ப்புத் தெரிவிக்க விரும்பும் பெற்றோர்/பாதுகாவலரானால், இளையர் நீதிமன்ற நீதிபதிக்கு தெரிவிக்கலாம்.

வழக்கின் விசாரணையில், இளையர் நீதிமன்ற நீதிபதி ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்பு உங்களிடமிருந்தும், தலைமை இயக்குநரை அல்லது காப்பாளரை அல்லது உங்கள் சட்ட பிரதிநிதிகளை விசாரிப்பார்.



# பயனுள்ள தகவல்

ஒரு சிறுவனின் உயிருக்கு ஆபத்து இருந்தால், உடனடியாக 999 என்ற எண்ணில் காவல் துறைக்கு அழைக்கவும்

ஏதேனும் சந்தேகத்திற்குரிய துன்புருத்தல் அல்லது புறக்கணிப்பு நிகழ்வைப்பற்றி புகாரளிக்க:
**சிறுவர் பாதுகாப்பு சேவைகளின் உதவி எண்**
1800-777-0000

சிறுவர் பாதுகாப்பு பற்றிய ஆலோசனைகளுக்கு:

**Big Love Child**
**பாதுகாப்பு நிபுணர் மையம்**
இணையத்தளம்:
http://www.biglove.org.sg/
இயங்கும் நேரம்:
திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை:
காலை 9.00-லிருந்து மாலை 6.00 வரை

**HEART@Fei Yue**
**பாதுகாப்பு நிபுணர் மையம்**
இணையத்தளம்:
https://www.fycs.org/our-work/children/community-based-child-protection-specialist-centre/
இயங்கும் நேரம்:
திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை:
காலை 9.30-லிருந்து மாலை 5.30 வரை

**PAVE**
**தனி நபர் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிபுணர் மையத்திற்கான ஒருங்கிணைந்த சேவைகள் (PAVE ISIFPSC)**
இணையத்தளம்:
https://www.pave.org.sg
இயங்கும் நேரம்:
திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை:
காலை 9.00-லிருந்து பிற்பகல் 1.00 வரை
பிற்பகல் 2.00-லிருந்து மாலை 6.00 வரை

**குடும்ப சேவை மையங்கள் (FSC)**
https://www.msf.gov.sg/our-services/directories

**சமூக சேவை நிலையங்கள் (SSA)**
https://www.ncss.gov.sg/navigator

**சட்ட ஆலோசனை**
உங்களுக்குச் சட்ட ஆலோசனை தேவைப்பட்டால், நீங்கள் பின்வருவனவற்றை அணுகலாம்:
– சட்ட உதவி இலாக்கா
– சமூக நீதி மையம் அல்லது அரசு நீதிமன்றங்களில் உள்ள சமூக சட்ட கிளினிக்குகள்

# குறிச்சொற்களுக்கான விளக்கங்கள்

**சிறுவர் மற்றும் இளம் வயதினர் சட்டம் (CYPA):** சிறுவர்கள் மற்றும் இளம் வயதினர்களின் நலன், பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றைப் பாதுகாக்கும் முக்கியச் சட்டம்.

**சமூக அறிக்கை:** சிறுவரின் குடும்பப் பின்னணி, நடத்தை, பள்ளி பதிவுகள், மருத்துவ வரலாறு மற்றும் வளர்ச்சி நிலை போன்ற தகவல்களைக் கொண்ட அறிக்கை.

**சமூக நல அலுவலர்:** சிறுவர் பற்றிய விசாரணை, மதிப்பீடு மற்றும் மேற்பார்வையை மேற்கொள்ள சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சினால் (MSF) நியமிக்கப்பட்ட ஓர் அதிகாரி.

இந்த பக்கம் வேண்டுமென்றே காலியாக விடப்பட்டுள்ளது

FAMILY JUSTICE COURTS
SINGAPORE